5. கவன ஈர்ப்பு

20—8—1978 அன்று இரவு திருச்சி அருகிலுள்ள சிறுகனூரில் ஒரு லாரி விரைவுப் பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது குறித்து

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" 20—8—1978 அன்று இரவு திருச்சி அருகிலுள்ள சிறுகனூரில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி புறப்பட்டுச் சென்ற விரைவுப் பேருந்து பழுதடைந்ததால், அவ் வழியாகச் சென்ற வேறொரு பேருந்தை நிறுத்தி அதில் பயணத்தை பிரயாணிகள் தொடர இருந்த நேரத்தில், எதிரே வேகமாக வந்த ஒரு லாரி பேருந்தின் மீது மோதி 4 பேர் இறந்ததும், பலர் காயமடைந்ததும் குறித்து ".

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 20—8—1978 அன்று தடம் எண் 589-ல் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் சென்று கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து எண் எக்ஸ் 861 நள்ளிரவு 12—45 மணிக்கு திருச்சியிலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள படலூர் என்னுமிடத்தில் தேசிய நெடுஞ் சாலையில் டீசல் டாங்கி பிராக்கெட் வெடிப்பின் காரணமாக பழுதடைந்து சாலையின் இடது பக்க ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பேருந்து, கியரில் வண்டி நிற்பதை அறிவிக்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது. பேருந்தின் நடத்துனர், வண்டி பழுதடைந்த தகவலை அறிவிக்கும் பொருட்டு திருச்சிக்குச் சென்று விட்டார். ஓட்டுநரும், பயணிகள் யாவரும் இறங்கி பேருந்தின் பின் பக்கம் சாலையில் அமர்ந்திருந்தனர். இந்த நிலையில் நள்ளிரவு 2.45 மணியளவில் தனியார் லாரியொன்று (டி. என். ஜி. 518) அதிவேகமாக எதிர்த் திசையிலிருந்து வந்து, நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் முன் பக்கத்தில் பலமாக மோதியது. இம்மோதலின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து சுமார் 65 அடி தூரம் பின் பக்கமாகத் தள்ளப்பட்டது. இதன் காரணமாகப் பேருந்தின் பின் பக்கம், சாலையில் அமர்ந்திருந்த பயணிகளில் இருவர் மீது பேருந்து ஏறிச் சென்றதில் அவ்விருவரும் ஸ்தலத்திலேயே மாண்டனர். ஓட்டுனர் உட்பட இருவர் பலத்த காயங்களுடன் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மாண்டனர். மற்றுமொரு பயணி திருச்சி அரசு பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கவலைக்கிடமான நிலையில் இல்லை. மற்றப் பயணிகளில் யாருக்கும் காயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை

20—8—1978 அன்று இரவு திருச்சி அருகிலுள்ள சிறுகனூரில் ஒரு லாரி விரைவுப் பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது குறித்து

1978 செப்டம்பர் 1] [திரு. சி. பொன்னையன்]

விபத்தினால் திரு. சுப்பிரமணி, திரு. ஜான்சன், திரு. மோகன்ராம், திரு. சண்முகம் பிள்ளை என்பவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள்.

திருச்சி பொது மருத்துவ மனையில் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் ஓட்டுநரின் பிரேதம் சென்னைக்குப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் லாரியில் கொண்டு வரப்பட்டு, இறுதிச் செலவுக்காக ரூபாய் 100 அன்னாரின் குடும்பத்திற்குத் தரப்பட்டது.

லாரியின் ஓட்டுநர் சிறுகனூர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். காவல் துறையினர் புலன் விசாரணை செய்து அவர் மீது ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். இவ்விபத்தின் காரணமாகப் பேருந்து மற்றும் லாரியின் முன் பகுதி முழுவதுமாகச் சேதமடைந்துள்ளது.

விபத்தின்போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து சாலையின் இடது ஓரத்தில் நிலையாக இருந்தது. விபத்து நடந்த இடம் நேரான தேசீய நெடுஞ்சாலையாகும். சாலையின் அகலம் 37 அடி. இரு மருங்கிலும் பொட்டல் வெளி. இது பற்றி வழக்கு விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் இருக்கிறது. முதல்வரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து மரணமடைந்தவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது.

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. க. இராமமூர்த்தி: மேலவைத் தலைவர்களே, நேற்று பேசுகின்றபோது, தமிழகத்திலே மது விலக்குக் கொள்கை எப்படி சிறழிந்து கொண்டிருக்கிறதென்பதை, சில உதாரணங்களோடு சொல்லி, விளக்கிக் காட்டுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. மேலும் இரண்டொன்றைச் சொல்லி மற்றவற்றிற்குச் செல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், விழுப்புரம் நகரில் கலவரம் ஏற்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்ப்பதற்குச் சென்றார்கள். அப்படிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நிலையிலே, மாண்புமிகு முதல்வரவர்களின் கண் முன்னேயே இரண்டு பேர்கள் குடி போதையில் இருந்த நிலையிலே, முதல்வர் அவர்களே, அவர்களைப் போலீசாரிடம் ஒப்படைத்தார்களென்ற தகவல் வந்தது. அதனுடைய பொருள் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதல்வரவர்கள் போகும்போது, அவரைச் சுற்றியிருக்கும் போலிஸ் பாதுகாப்பு நமக்குத் தெரியும். அதிகாரிகள் நிறைய இருப்பார்களென்பது தெரியும். அப்படி மக்கள் கூடுகின்ற இந்தப் பகுதிகளில் மிகச் சுலபமாகக் குடித்துவிட்டு வர முடியுமென்ற நிலை இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.